# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 1/2025**

அ.சா.8

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | டாக்டர். பிரபாகரன் | Caste: | |
| Father's Name: | ராமசாமி | Calling: | மருத்துவர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 32 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 06.03.2026

( 2ம் எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. 1,3 எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் தற்போது கமுதி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.10.2024ம் தேதி மாலை 4.40மணியளவில் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது நகரத்தார்குறிச்சியை சேர்ந்த சண்முகம் மகன் ஹரிகிருஷ்ணன், வயது 45 என்பவர் தானாகவே சிகிச்சைக்கு வந்தார். அவரை 09.10.2024ம் தேதி மதியம் 1.30மணியளவில் நகரத்தார்குறிச்சி விவசாய நிலத்தில் நின்று கொண்டிருந்தபோது அடையாளம் தெரிந்த மூன்று நபர்களால் கையால் அடித்து காயம் ஏற்படுத்தியதாக சிகிச்சைக்கு வந்திருந்தார். அவரை பரிசோதித்ததில் அவருடைய வலது கன்னத்தில் மெல்லிய சிராய்ப்பு காயம் (Linear abrasions) இருந்தது. மேலும் அவர் இடது கண்ணில் வலி மற்றும் சிவந்து உள்ளது என்றும் தொந்தரவு இருப்பதாகவும் கூறினார். அவருக்கு புறநோயாளியாக சிகிச்சை வழங்கி அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 15:28:01 +0530

காயம் என சான்று வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.4**. இதுசம்பந்தமாக காவல்துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-

சிராய்ப்பு காயத்தின் நீள, அகலத்தை அளக்க முடியும் என்றும் ஆழத்தை அளக்க முடியாது என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு ஏற்பட்டிருந்த சிராய்ப்பு காயத்தின் நீள அகலத்தை நான் தயாரித்த விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சிராய்ப்பு காயம் ஏற்படவில்லை என்பதால்தான் நீள, அகலத்தை குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. காயம்பட்ட நபருக்கு இடது கண் சிவந்து இருந்ததா என்பதை நான் பார்த்து என்னுடைய விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இடது கண் சிவந்து காணப்படவில்லை என்பதால்தான் காயம்பட்ட நபர் சிவந்துள்ளது என கூறியும் நான் குறிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கண் சிவந்து காணப்படுவது வேறு சில நோயினாலும் வரலாம் என்றால் சரிதான். சிறு முள் கீறினால்கூட மெல்லிய சிராய்ப்பு காயம் ( Linear abrasions) வரலாம் என்றால் சரிதான்.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 15:28:13 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)